## சுருக்கம்

கல்லூரிக் கல்வி - தமிழ்நாடு அமைச்சுப் பணி - கருணை அடிப்படையில் பணி நியமனம் - சென்னை, கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு.க.கார்த்திக், என்பவரது பணியினை வரன்முறை செய்தல் - ஆணைகள் வெளியிடப்படுகின்றன.

---

### உயர்கல்வி (ஜி2) துறை

அரசாணை (3ப) எண்.22

நாள் 11.09.2023
சோபகிருது வருடம், ஆவணி - 25.
திருவள்ளுவர் ஆண்டு, 2054.

**படிக்கப்பட்டவை:-**

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 23.01.2020.
2. கல்லூரிக் கல்வி இயக்குநர் கடித ந.க.எண்.10236/பி1/2023, நாள் 07.06.2023.

*****

**ஆணை:-**

மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் கல்லூரிக் கல்வி இயக்குநர் சென்னை, நந்தனம், அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராகப் பணியாற்றி பணியிலிருக்கும் போது 11.06.2019 அன்று இயற்கையெய்திய திரு.நா. கணேஷ் என்பவரது வாரிசுதாரர் திரு.க.கார்த்திக் என்பவர் கள்ளக்குறிச்சி மாவட்டம், ரிஷிவந்தியம், அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 27.01.2022 முற்பகல் அன்று பணியில் சேர்ந்து, பின்னர், இடப்பெயர்வு காரணமாக கல்லூரிக் கல்வி இயக்ககத்தில் தொடர்ந்து பணியாற்றி வருகிறார் என்றும், தமிழ்நாடு அமைச்சுப் பணிகளுக்கான சிறப்பு விதிகளின்படி இப்பணியிடத்திற்கு தேவையான வயது மற்றும் கல்வித் தகுதிகளை தனியர் பெற்றுள்ளார் எனவும், கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்வதற்கான அனைத்துத் தகுதிகளையும் தனியர் பூர்த்தி செய்துள்ளார் எனத் தெரிவித்து தனியரது பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் வரன்முறை செய்து ஆணை வழங்குமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

2. கல்லூரிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை உரிய ஆவணங்களுடன் மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி அரசு க்வனமுடன் ஆய்வு செய்து, சென்னை, நந்தனம், அரசினர் ஆடவர் கலைக் கல்லூரியில் உதவிப் பேராசிரியராக பணியாற்றி பணியிலிருக்கும் போது 11.06.2019 அன்று இயற்கையெய்திய திரு.நா.கணேஷ் என்பவரது வாரிசுதாரர் திரு.க.கார்த்திக் என்பவரை கல்லூரிக் கல்வித் துறையில் தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர் பணியிடத்தில், அவர் பணியிடத்திற்கு தேவையான உடல் தகுதியை பெற்றிருக்க வேண்டும் என்ற நிபந்தனையுடன், அவர் பணியில் சேர்ந்த நாளான 27.01.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணையிடுகிறது. இவ்வாறு, முன்தேதியிட்டு அவரது பணி வரன்முறைபடுத்தப்படுவதால், தனியர் ஆண்டு ஊதிய உயர்வுகள் மற்றும் ஊதிய நிலுவையிருப்பின் விதிகளின்படி அவைகளைப் பெறத் தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்புத் துறையின் அ.சா.கு எண்.5730/ட்டி1/2023-1, நாள் 10.08.2023 மற்றும் மனிதவள மேலாண்மைத் துறையின் அ.சா.கு எண்.5398598/ஜி1/2023, நாள் 04.09.2023-ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ. கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
கல்லூரிக்கல்வி இயக்குநர் (மு.கூ.பொ), சென்னை -15.
திரு.க.கார்த்திக், இளநிலை உதவியாளர், கல்லூரிக்கல்வி இயக்குநரகம், சென்னை -15.
(கல்லூரிக்கல்வி இயக்குநர் வழியாக)
நகல்
அரசு முதன்மைச் செயலாளரின் தனிச்செயலர், உயர்கல்வித்துறை, சென்னை-9.
தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு / மனிதவள மேலாண்மைத் துறை, சென்னை-9.
இகோ/உதிரி
சுத்த நகல் கோப்பிற்கு (e-4932097/ஜி2/2023)

// ஆணைப்படி / அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்